# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்பு கல்விமாணித் தேர்வு

## 2011/2012

## (2017 – July/AUGUST)

## EDS - 4143 கல்வித்திட்டமிடலும் அபிவிருத்தியும்

## (Educational Planning and Development)

நேரம்: 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக

1) அ)திட்டமிடல் என்பதனால் விளங்கிக் கொள்வதனை அறிஞர்களின் வரைவிலக்கணங்களின் உதவியுடன் விளக்குக?

(8 புள்ளிகள்)

ஆ) 1960களிலிருந்து கல்வித் திட்டமிடலின் அடிப்படை அம்சங்கள் தொடர்பாக கல்வித் துறைத் தலைவர்களும் பொருளியலாளர்களும் முன்வைத்த அடிப்படை அம்சங்களை குறிப்பிட்டு உதாரணங்கள் மூலம் தெளிவுபடுத்துக?

(8 புள்ளிகள்)

இ) " முகாமைத்துவ செயற்பாடுகளில் திட்டமிடலானது ஒரு கூறாகவே செயற்படுகின்றது" இந்தவகையில் D=f(p+m) என்ற சமன்பாட்டில் மூலம் திட்டமிடலுக்கும், முகாமைத்துவத்திற்கும் இடையயுள்ள தொடர்புகளை ஆரய்க?

(9 புள்ளிகள்)

2) அ) பாடசாலைச் செயற்பாடுகளை திட்டமிட்டுச் செயற்படுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளும் நன்மைகள் தொடர்பாக கருத்துரைக்குக? (7 புள்ளிகள்)

ஆ) வெற்றிகரமான திட்டம் ஒன்றை தயாரிக்கையில் கையாளக்கூடிய திட்டமிடலின் முன் ஆயத்த நோக்கங்களைக் குறிப்பிட்டு விளக்குக? (9 புள்ளிகள்)

இ) கீழ் நோக்கிய மற்றும் மேல் நோக்கிய திட்டமிடலின் (Top -Down and Bottom- up" Planning ) கல்வித்திட்டம் வெற்றி பெறுவதற்கு அதிகளவில் பயன்படுத்தப்படும் திட்டமிடலின் சிறப்பம்சங்கள் தொடர்பாக கருத்துரைக்குக? (9 புள்ளிகள்)

3) அ) பாடசாலைகளில் அதிபர், ஆசிரியர்கள் அதனுடன் தொடர்புடைய ஏனைய பயனாளிகள் ஆகியோர் பாடசாலை மேம்பாட்டில் பங்குபற்றத்தக்க ஒருங்கிணைந்த அணுகுமுறையே பாடசாலை மேம்பாட்டுத்திட்டம் (PSI) ஆகும். இத்திட்டத்தின் மூலம் நிறைவேற்றப்படும் முக்கிய செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்க?

(13 புள்ளிகள்)

ஆ) பாடசாலைகளில் ஏற்படும் பௌதிக, மனித வளப்பற்றாக்குறையை தீர்ப்பதில் பாடசாலை அதிபர் எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பது பயனுடையதாக அமையும் என்பது பற்றிய உமது கருத்துக்களை முன்வைத்து விளக்குக? (12 புள்ளிகள்)

4) அ) இலங்கையின் பல பாகங்களிலும் கல்வி அபிவிருத்தியில் சமனற்ற போக்கே இன்றும் காணக்கூடியதாக உள்ளது. இந்த வகையில் பிராந்திய ரீதியாக கல்வி அபிவிருத்தியில் சமமின்மைக்குப் பங்களிப்புச் செய்யும் மக்கள் தொகை, கல்வியியற் காரணிகள், புவியியற் காரணிகள், அரசியற் காரணிகள் போன்றவை பற்றி விமர்சன ரீதியாக ஆராய்க?

(4x4 =16 புள்ளிகள்)

ஆ) திட்டமிடல் அணுகுமுறைகளில் சமுதாயக் கேள்வி அணுகுமுறை என்பதால் நீர் விளங்கிக் கொள்வதனைக் குறிப்பிட்டு, இத்தகைய அணுகுமுறையின் படி திட்டமிடுவதால் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகளை ஆராய்க? (9 புள்ளிகள்)

5) அ) நாடொன்றின் கல்வித்திட்டமிடலைத் தயாரித்தல் என்பது ஒழுங்கு முறையிலான பல நடவடிக்கைகளைக் கொண்டதாகும். இவ்வகையில் பாடசாலையில் திட்டமிடலை மேற்கொள்ளும் போது கடைப்படிக்கப்படும் திட்டமிடல் படிமுறைகள் ஆறினையும் குறிப்பிட்டு அவை நடைமுறைப்படுத்தப்படும் விதத்தினை விளக்குக? (6x3 = 18 புள்ளிகள்)

ஆ) "இலங்கையில் கல்விதிட்டமிடல் நிர்வாகப் பன்முகப்படுத்தலின் அடிப்படையில் ஐந்து மட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது" இவ்வைந்து மட்டங்களிலும் நிறைவேற்றப்படும் பணிகள் தொடர்பாக ஆராய்க? (7 புள்ளிகள்)

6) அ) நீர் ஒரு பாடசாலையின் கடமைகளை அதிபராக புதிதாக பொறுப்பேற்றதன் பிற்பாடு வருடம் தோறும் அதிபரால் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்படுகின்ற பாடசாலை அமுலாக்கத்திட்டம் பகுதி - I பகுதி - II என்பவற்றுள் உள்ளடங்கப்படும் செயற்றிட்டங்களை எவ்வாறு நடைமுறைப்படுத்துவீர்கள் என்பதனை உதாரணங்கள் மூலம் எடுத்துக்காட்டுக?

(8x2=16 புள்ளிகள்)

ஆ) இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் பெண்களிற்கான சுய தொழில் வாய்ப்புக்குத் திட்டமிடலினை மேற்கொள்ளும் போது கல்விதிட்டமிடலாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சங்கள் தொடர்பாக ஆராய்க? (9 புள்ளிகள்)